**அ.வ.எண்.118/2018**

**பி.வா.சா.4 : அருணாச்சலம்**

**தேதி : 19.09.2025**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 65, 68 முதல் 72, 75 முதல் 100, 102 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஈரோடு மாவட்டம், திண்டல் கிராமத்தில் இருந்து வருகிறேன். உங்கள் மனைவி கிரையம் வாங்கிய சொத்து தும்பிவாடி கிராமத்தில் உள்ளது. தும்பிவாடி கிராமத்திற்கும், நான் குடியிருக்கும் திண்டல் கிராமத்திற்கும் சுமார் 82 கி.மீ., தொலைவு இருக்கலாம். உங்கள் மனைவி வாங்கிய இடம் காலிமனையாக இருந்தது என்று சொன்னால் சரிதான். தாவாச்சொத்தில் இரண்டு வீடுகள், ஒரு ஆஸ்ரம் பெரிய அளவில் உள்ளது, மற்றும் ஒரு டைனிங்கால் உணவு அருந்தும் இடம் உள்ளது, ஆஸ்ரமத்திற்காக உணவு அருந்தும் இடம் உள்ளது. என் மனைவி பெயரில் இருக்கும் கூட்டு பட்டாவிற்கு வரி கட்டுவது இல்லை, பிறகு சாட்சி வரி கட்ட தேவையில்லை என்று தானாக சொன்னார். தாவாச்சொத்தில் உள்ள தடத்தை வாதி ஆக்கிரமித்துள்ளாரா என்றால் சரிதான். நீங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.41 மற்றும் பி.வா.சா.ஆ.42 ஆகிய ஆவணங்களில் வாதி தரப்பினராக உள்ளாரா என்றால் உள்ளார். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேற்சொன்ன இரண்டு உத்திரவின்பேரில்

உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து அதில் STAY வழங்கப்பட்டுள்ளது என்றால் காலி செய்யக்கூடாதென உத்திரவுகள் உச்சநீதிமன்றத்தில் வாங்கப்பட்டுள்ளது.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.